₹100/-

4 - 5

ஞானகுரு

மகிழ்ச்சி

வைகாசி 2025

எஸ்.கே.முருகன்

சிலைக்குப் பால் ஊற்றலாமா..?

Online
கவுன்சிலிங்
WhatsApp Call Only

கணவன், மனைவி, குழந்தைகள் உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு

மனவள ஆலோசகர்
எஸ்.கே.முருகன்
ஞானகுரு கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு : +91 80725 89355

www.gyaanaguru.com

ஆசிரியர் பக்கம்

உங்களால் முடியாது என்று நினைக்கிறீர்களா?

எந்த முயற்சியும் செய்யாமல், தங்களால் முடியாது என்று ஒப்புக் கொள்ளும் நபர்களே அதிகம் இருக்கிறார்கள். அதேநேரம், தங்களுக்கு ஆசைப்பட்டது எதுவும் கிடைக்கவில்லை என்று புலம்பவும் செய்கிறார்கள்.

டாக்டர் படிப்புக்கு நிறைய மதிப்பெண்கள் வேண்டும், அதெல்லாம் என்னால் முடியாது என்று பொறியியல் தேர்வு செய்கிறார்கள். தினமும் பேப்பர் படிச்சு ஜெனரல் நாலேஜ் இருப்பவர்கள் மட்டுமே ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் வெற்றியடைய முடியும் என்று யுபிஎஸ்சி தேர்வுகளில் கலந்துகொள்வதே இல்லை. உறவினர் சினிமா ஃபீல்டில் இருப்பவர் மட்டுமே சினிமாவில் ஜெயிக்க முடியும் என்ற எண்ணத்தில் நுழைய மாட்டார்கள்.

அழகான பெண்ணுக்கு என்னைப் பிடிக்காது என்று காதலை சொல்ல மாட்டார்கள். புரமோஷன் தரமாட்டார்கள் என்று இவர்களாகவே முடிவு செய்து கேட்காமல் அமைதி காப்பார்கள். சொந்தத் தொழில் செய்வதற்கு ராசி இருக்க வேண்டும், அது என்னிடம் இல்லை என்று ஒதுங்கிவிடுவார்கள்.

இப்படி தாங்களாகவே முடியாது, முடியாது என்று நினைத்துக் கொள்பவர்களால் நிச்சயம் எதுவும் செய்ய முடியாது. ஏனென்றால், மனம் அதனை முழுமையாக நம்பிவிடும். அதனால் முயற்சி செய்யாமலே தோற்றுவிடுகிறார்கள்.

கிடைக்கும், கிடைக்காது என்ற கவலை மனிதர்களுக்குத் தேவையில்லை. தோல்வி பற்றிய அச்சமின்றி முயற்சிக்க வேண்டும். அப்படி முயற்சி செய்யும் நேரத்தில் வெற்றி கிடைக்கவில்லை என்றாலும் வெற்றியின் பக்கத்தில் செல்ல முடியும். வெறுமனே முயற்சி செய்த காரணத்தாலே வெற்றி பெற்றவர்கள் நிறைய பேர் உண்டு. எனவே, வெற்றி என்பது முக்கியம் இல்லை. முயற்சியே முக்கியம்.

எனவே, முடியும் என்று நம்புங்கள், முயற்சியுங்கள், வெற்றி பெறுங்கள். அதுவே, மகிழ்ச்சி.

www.gyaanaguru.com

திறமை, அறிவு இருந்தால் மட்டும் போதாதுங்க...

ராமானுஜனே உதாரணம்

கணித மேதை சீனிவாச ராமானுஜன் ஓர் அரிதான மனிதப்பிறவி. அவருடைய கணித அறிவுக்கு இணையாக இந்த உலகில் எவரையும் சொல்ல முடியாது. ஆனால், அவர் வாழ்ந்த காலத்திலும் வாழ்க்கைக்குப் பிறகும் போதிய அங்கீகாரம் கிடைக்கவில்லை, அமைதியான வாழ்க்கை கிடைக்கவில்லை, போதிய வசதிகள் கிடைக்கவில்லை. வயிறு நிறைய சோறு கூட அவருக்குக் கிடைக்கவில்லை. நோய் துன்பத்துடன் போராடிக்கொண்டே இருந்தார்.

அறிவு, திறமை இருந்தும் ராமானுஜனால் ஏன் வெற்றி அடைய முடியவில்லை, மகிழ்ச்சியாக வாழ முடியவில்லை.

இந்த கேள்விக்கு விடை காண்பதற்கு முன்பாக அவரது வாழ்க்கையையும் சாதனைகளையும் கொஞ்சம் புரட்டிப் பார்க்கலாம்.

இந்த உலகில் கணித மும்மூர்த்திகள் என்று மூவரை கணிதவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். முதலாமவர் ராமானுஜன். மற்றவர்களான லியோனார்டு ஆய்லர் மற்றும் கார்ல் குஸ்டாவ் ஜாகோபி ஆகிய இருவரும் முழுமையாக கல்லூரிப்படிப்பு முடித்தவர்கள். ஆய்வுக்குத் தேவையான ஊக்கமும் வழிகாட்டுதலும் பெற்றவர்கள். இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு தனி மனிதனாக புதிய விண்மீனாகத் திகழ்ந்தவர் ராமானுஜன்.

1887, டிசம்பர் 22 அன்று தமிழ்நாட்டின் ஈரோடு நகரத்தில் பிறந்தவர் ராமானுஜன். அவரது தந்தை நாராயணசாமி அய்யங்கார் ஏழ்மையான நிலையிலிருந்த கம்பள வியாபாரி. தாய் கோமளம் இசை ஆர்வம் கொண்டவர். சிறுவயதிலே காரணம் எதுவுமின்றி ராமானுஜனுக்கு கணிதத்தில் மிகுந்த ஈர்ப்பு இருந்தது. பத்தாம் வயதில் உயர்நிலை கணிதங்களை சுயமாக எழுதத் தொடங்கினார்.

www.gyaanaguru.com

> கொண்டாட்டங்களிலும் மரியாதையிலும் மட்டும் சாதனை இல்லை என்பதற்கு உதாரணம் ராமானுஜன். கணிதம் இருக்கும் வரை ராமானுஜத்தின் பெயரும் இருக்கும். இதுவே அவரது உழைப்புக்குக் கிடைத்த வெற்றி.

ராமானுஜனின் கணித வல்லமையும் நினைவாற்றலும் அவரது ஆசிரியர்களுக்கு ஒரு புதிராக இருந்தது. ஆரம்பப் பள்ளியின் கடைசித் தேர்வில் மாவட்டத்திலேயே முதலாவதாகத் தேறியதால் கும்பகோணம் டவுன் மேல்நிலைப் பள்ளியில் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. பள்ளியில் படித்தபோதே கல்லூரி மாணவர்களின் கணித புத்தகத்தை படித்து விடை கண்டுபிடித்து அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தினார்.

ராமானுஜத்துக்கு 16வது வயதில் G.S. Carr எழுதிய A Synopsis of Elementary Results in Pure and Applied Mathematics என்ற புத்தகம் கிடைத்தது. 5000க்கும் மேற்பட்ட முடிவுகளை உள்ளடக்கிய இந்த புத்தகம் ராமானுஜத்தின் கணித ஆர்வத்தை மேலும் தீவிரப்படுத்தியது. இந்த புத்தகத்தைப் படித்தபிறகு முழுக்க முழுக்க கணிதத்தில் ஈடுபாடு காட்டினார். அதனால் கணிதம் தவிர மற்ற பாடங்களில் தோல்வி அடைந்தார். இந்த காரணத்தால் பட்டப்படிப்பு பெற முடியாமல் போனது.

சீனிவாச இராமானுஜன் தனது 22வது வயதில் ஒன்பதே வயது நிரம்பியிருந்த ஜானகியைக் கைப்பிடித்தார். 1910ம் ஆண்டு இந்திய கணிதக் கழகம் பற்றி கேள்விப்பட்டு அதனை தொடங்கிய பேராசிரியர் வி.ராமஸ்வாமி அய்யரை சந்தித்தார். ராமானுஜத்தின் மேதமையை அங்கீகரித்த ராமஸ்வாமி மூலம் சென்னை துறைமுக அலுவலகத்தில் எழுத்தர் வேலையை ஏற்றுக் கொண்டார். அதேநேரம் கணிதத்தில் ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வந்தது. 1911ம் ஆண்டு இந்தியக்கணிதக் கழகத்தின் ஆய்வுப் பத்திரிகையில் (Journal) இராமானுஜனின் முதல் ஆய்வுக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.

ராமஸ்வாமியின் பரிந்துரையின் பேரில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த ஜி.ஹெச். ஹார்டிக்கு கடிதம் எழுதிய ராமானுஜன் அவரது சொந்தக் கண்டுபிடிப்பாக 120 தேற்றங்களையும் அனுப்பிவைத்தார். ராமானுஜத்தின் தேற்றங்கள் ஹார்டிக்கு கொஞ்சம் விநோதமாகத் தெரிந்தது. கொஞ்சம் தவறுகளும் நிறைய மேதமையும் தென்பட்டது. உடனே ராமானுஜத்தை கேம்பிரிட்ஜ்க்கு அழைத்தார்கள்.

கடல் தாண்டிச் செல்வது அவருக்கு மிகப்பெரும் தடையாக இருந்தாலும் 1914ம் ஆண்டு கேம்பிரிட்ஜ் சென்றார். அங்கிருந்த நான்கு ஆண்டுகளும் தினம் தினம் புதிய தேற்றங்களைக் காட்டி ஆச்சர்யப் படுத்தினார். நான்கு ஆண்டுகளில் 27 ஆய்வுக்கட்டுரைகள் பிரசுரித்து சாதனை படைத்தார். இதையடுத்து 1918ம் ஆண்டு ஃபெல்லோ ஆஃப் த ராயல் சொசைட்டி என்ற கௌரவம் கிடைத்தது.

ராமானுஜத்தின் பெருமை இந்தியாவுக்கும் பரவியது. எனவே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியர் பதவி கிடைக்கும் வாய்ப்பு உருவானது. இந்த நேரத்தில் கடுமையான வயிற்று வலியால் பாதிக்கப்பட்டார். இங்கிலாந்து உணவு ராமனுஜத்துக்கு ஒப்புக்கொள்ளவில்லை என்பதால் பட்டினி கிடந்து பெரும் சிக்கலுக்கு ஆளாகி காச நோயில் சிக்கிக் கொண்டார். அதோடு சீதோஷ்ணம், தனிமையும் அவரை தொந்தரவு செய்ததால் 1919ம் ஆண்டு இந்தியா திரும்பினார். நிறைய நிறைய கனவுகளுடன் இந்தியா திரும்பிய ராமானுஜன் அவரது 32வது வயதில் அதாவது 1920ம் ஆண்டு மரணம் அடைந்தார்.

ராமனுஜம் 3 நோட்டுகள் முழுக்க தேற்றங்கள் எழுதியிருக்கிறார். பின்னாளில் அவற்றை வரிசைப்படுத்தி புத்தகமாக வெளியிட்டார்கள். அதில் 3542 தேற்றம் அவர் நிறுவினார், 2000 தேற்றங்கள் உலகுக்கு அவர் புதிதாய்ச் சொன்னவை. இன்னும் பல தேற்றங்களுக்குக் கேள்விகளை விட்டுச் சென்றிருக்கிறார். விடை இது வரை கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் இப்போது ராமானுஜத்தின் நோட்டுப் புத்தகங்கள் உலகம் முழுவதும் கணித ஆராய்ச்சியாளர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. இந்திய அரசால் அவரது பிறந்த நாள் "தேசிய கணித நாள்" என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் உலகத்திற்கு அளித்த அறிவுப் பொக்கிஷம் நூற்றாண்டுகளுக்குப் பின்னும் ஆச்சர்யம் அளிப்பவையாகவே இருக்கின்றன.

இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் உலக அளவில் பேரும் புகழும் பெற்றிருப்பார் என்பது உண்மை. அதேநேரம், வாழும் காலத்தில் அவர், “எனது மூளை சோர்வடைகிறது. ஒரு நாளைக்கு ஒரு முறையாவது எனக்கு உணவு வேண்டும். அதுதான் எனக்கு முன் இருக்கும் மிகப்பெரும் சவால். வயிற்றுக்கு மட்டும் ஒரு வழி கிடைத்துவிட்டால் உற்சாகமாக இரவு பகலாக ஆராய்ச்சி செய்வேன்’ என்று கூறியிருப்பதைப் படிக்கும்போது வேதனை உருவாகிறது.

மந்திரச்சொல்

வெற்றி தலைக்கு
ஏறியவர்களுக்கு
தற்பெருமை
வாய்க்குள்
வந்துவிடும

திறமை, அறிவு இருந்தால் மட்டும் போதாதுங்க

ராமானுஜத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட கணிதக் கல்வி கிடைக்கவில்லை. முறையான வழிகாட்டிகள் இருக்கவில்லை. ஆனாலும் அவர் கணக்கியல், எண்ணியல் கோட்பாடுகள், தொகை வரிசைகள், continued fractions, elliptic integrals, modular functions, mock theta functions போன்ற முக்கியமான துறைகளில் ஆயிரக்கணக்கான முடிவுகளை கண்டுபிடித்தார். இவர் கூறிய பல முடிவுகள் நிரூபணமின்றி இருந்தாலும், பின்னாட்களில் அந்த முடிவுகள் உண்மையானவை என்று நிரூபிக்கப்பட்டன. இவரது நோட்டுப் புத்தகங்களில் உள்ள பல சூத்திரங்கள் இன்னும் முழுமையாக ஆய்வு செய்யப்படாதவையாகவே உள்ளன. ராமானுஜத்தின் கணித முறையான கிரிப்டாலாஜி இன்று பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்களில் பயன்பட்டு வருகிறது. ஆனால், அதை உருவாக்கியவர் ராமானுஜன் என்பது யாருக்கும் தெரியவில்லை. அதேநேரம், இத்தனை அறிவு, திறமை, மேதமை இருந்தும் ராமானுஜத்தால் ஏன் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ இயலவில்லை என்ற கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது.

அங்கீகாரத்துக்கும் வெற்றிக்கும் அறிவு, திறமை மட்டும் போதாது. வாழ்க்கைச் சூழலும் சமுதாய ஒத்துழைப்பும் இருக்கும் இடத்தில் மட்டுமே சாதனையாளர்கள் கொண்டாடப்படுகிறார்கள். அடிமைப்பிடியில் இந்தியாவும் உலகம் முழுக்க போர் அபாயமும் சூழ்ந்திருந்த காலகட்டத் தில் ராமானுஜத்தின் திறமையைப் புரிந்துகொள்ளவும் கொண்டாடவும் யாரும் இருக்கவில்லை.

ஆனால், கொண்டாட்டங்களிலும் மரியாதையிலும் மட்டும் சாதனை இல்லை என்பதற்கு உதாரணம் ராமானுஜன். கணிதம் இருக்கும் வரை ராமானுஜத்தின் பெயரும் இருக்கும். இதுவே அவரது உழைப்புக்குக் கிடைத்த வெற்றி.

ரிஸ்க் எடுக்கலைன்னா ரஸ்க் கிடைக்காது.

பணமே மந்திரம்

பணம் முக்கியம். அதைவிட பணம் பற்றிய புரிதல் முக்கியம். பணம் எப்படி வருகிறது, எந்த வழியில் காணாமல் போகிறது என்பது நிறைய பேருக்குத் தெரிவதே இல்லை. அதனால் வியாபாரத்தில் கொழுத்த லாபம் கிடைக்கும்போது அது தன்னுடைய திறமையால் கிடைத்தது என்று நம்புகிறார்கள். எதிர்பாராமல் தோல்வி வந்துவிட்டால் சூழ்நிலை சரியில்லை, மற்றவர்கள் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்று காரணம் சொல்கிறார்கள்.

உண்மை என்ன தெரியுமா?

திறமையால் மட்டுமே யாருக்கும் லாபம் கிடைப்பதில்லை. ஏனென்றால் திறமைசாலிகள் இந்த உலகில் எக்கச்சக்கமாக இருக்கிறார்கள். கடுமையாக உழைப்பதாலும் பணம் வருவதில்லை. ஏனென்றால் கடுமையாக உழைப்பவர்கள் பெரும்பாலும் வறுமையில் தான் இருக்கிறது. சூழ்நிலை மற்றும் பலருடைய ஒத்துழைப்பு கிடைக்கும் நேரத்தில் அதீத லாபம் கிடைக்கிறது. இந்த ஒத்துழைப்பு கிடைக்காத பட்சத்தில் நஷ்டம் வருகிறது. அவ்வளவுதான்.

பணம் பற்றி புரிந்துகொள்வதற்கு சில முக்கியமான தகவல்களை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

- பயம், எதிர்கால அச்சம் உள்ளவர்கள் பணத்தை செலவழிப்பதற்கு மட்டுமின்றி முதலீடு செய்வதற்கும் மிகுந்த தயக்கம் காட்டுகிறார்கள். இந்த அச்சமே அவர்களுக்கு நஷ்டத்தைக் கொண்டுவரலாம்.
- சரியான நேரத்தில் சிறிய கடன் திருப்பிக் கொடுத்தால் பெரிய கடன் தானாகவே கிடைக்கும்.
- மிகப்பெரும் லாபத்துக்கு ஒருபோதும் ஆசைப்படாதீர்கள். மிகப்பெரிய லாபத்துக்குப் பின்னே மிகப்பெரும் நஷ்டமும் கிடைக்கும். நிதானமாக, நியாயமான வளர்ச்சியே நிரந்தரமாக இருக்கும்.
- நிதி பற்றிய அறிவு இருந்தாலும் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களால் பணம் சேமிக்க முடியாது. கணக்கு எழுதி வைக்காதவர்கள் மட்டுமே, எல்லா செலவும் தேவையான செலவு என்று கருதுகிறார்கள்.
- அப்பா வங்கியைத் தவிர வேறு எதிலும் பணம் சேமிக்காதவராக இருக்கலாம். அதுதான் சரி என்று கிடையாது. பெற்றோர் சொல்லித்தந்த பணம் பற்றிய பாடத்தை விட்டு வெளியே வாருங்கள். அவரவர் வாழ்க்கைக்கு ஏற்ப பணத்தைத் திட்டமிடுங்கள்.
- புத்திசாலித்தனம், திறமை, மேதாவித்தனம் போன்ற பண்புகளுக்கும் பணத்துக்கும் பெரிய தொடர்பு கிடையாது. பணத்தின் மீதான ஆசை, ஆர்வம் மற்றும் அக்கறை உள்ளவர்களிடம் செல்வம் சேர்கிறது.
- நிரந்தரமான மாத சம்பளத்துக்கு ஆசைப்படுபவர்களால் ஒருபோதும் கோடீஸ்வரராக மாற முடியாது. தொழில், வியாபாரம் என்று ரிஸ்க் எடுக்கும் தைரியசாலிகள் மட்டுமே லாபம் பார்க்கவும், கோடீஸ்வரர்களாக மாறவும் முடியும்.
- மாத சம்பளத்துக்காரர்கள் உழைக்கும் 8 மணி நேரத்துக்கு மட்டுமே சம்பளம் பெற முடியும். அதிகம் உழைத்தாலும் குறைவாக உழைத்தாலும் சம்பளம் மாறப்போவதில்லை. தொழிலதிபர் ஒருவருக்காக நிறைய வேலையாட்கள் உழைக்கிறார்கள். குறைவான பணம் கொடுத்து உழைப்பை வாங்கிக்கொள்கிறார். அதிக விலைக்கு அந்த உழைப்பை விற்று லாபம் ஈட்டுகிறார். இதுவே பணம் சம்பாதிக்கும் எளிய வழி. மற்றவர்களை உங்களுக்காக உழைக்கச் செய்யுங்கள்.
- எவ்வளவு செலவாகும் என்ற கணக்கு பார்க்காமல் செலவு செய்யும் மனநிலை உள்ளவரே உண்மையான செல்வந்தர்.
- தன்னிடம் எத்தனை செல்வம் இருக்கிறது என்பதை மற்றவர்களிடம் காட்டுவதற்காக ஒருவர் செலவு செய்கிறார் என்றால், அவர் நஷ்டத்தில் இருக்கிறார் என்று அர்த்தம்.
- எந்த நேரமும் செல்வம் தொலைந்துபோகலாம், ஏமாந்து போகலாம் என்று அச்சம் இருப்பது அவசியம். இந்த அச்சம் இருப்பவரே பணத்தை வெவ்வேறு வழிகளில், வெவ்வேறு முறைகளில் முதலீடு செய்கிறார்கள். இதன் மூலம் ஒரே நேரத்தில் பணம் தொலைந்துபோவதை தடுக்க முடியும்.
- திட்டமிடுதல் என்பது பணம் சம்பாதிப்பதற்கு முக்கியமான ஒரு வழி. அதேநேரம், திட்டமிட்டபடி நடக்கவில்லை என்றால் என்ன செய்வது என்பதற்கும் ஒரு திட்டம் இருக்க வேண்டும். ஏனென்றால் நினைத்தபடி, திட்டமிட்ட வகையில் எல்லாம் நடக்கும் என்பது உறுதியில்லை.
- எல்லாமே சரியாக இருந்தாலும் பணம் நஷ்டம் அடைவதற்கு கண்ணுக்குத் தெரியாத காரணங்கள் இருப்பதுண்டு. எனவே, எதிர்பாராததை எதிர்கொள்ளவும் தயாராக இருப்பவரே பணத்தை எட்டிப்பிடிக்க முடியும்.
- அதிர்ஷ்டம், ஆபத்து இந்த இரண்டும் பணத்திற்கு இல்லை. ஆனால், மனிதர்கள் இவற்றினாலே பணம் வருவதாகவும் போவதாகவும் நினைக்கிறார்கள்.
- நீண்ட கால முதலீடு நல்லது. அதேநேரம், உபரி பணத்தை மட்டுமே அதற்குப் பயன்படுத்த வேண்டும்.

செல்வந்தர் ஆக முடியும் என்று நம்புங்கள். செல்வந்தர் போலவே நடந்துகொள்ளுங்கள். பணம் தானே உங்களைத் தேடி வரும்.

www.gyaanaguru.com

பிரபலங்களின் முதுமை ஊஞ்சலாடுகிறது.

இந்த பூமிக்குப் பாரமாக இன்னும் இருக்கேன், இந்த வயசுக்குப் பிறகு வாழ்ந்து என்ன செய்யப் போறோம், இன்னமும் உசுரை ஆண்டவன் எடுத்துக்க மாட்டேங்கிறான் - இவையெல்லாம் முதியவர்கள் வாயிலிருந்து பொதுவாக வரும் வார்த்தைகள்.

முதுமை என்றாலே சோகம் என்பது உண்மை இல்லை. உடல் நலக் குறைபாடு, தனிமை, வேலையின்மை, வெறுமை போன்றவை இளைய வயதினருக்கும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, இவை எல்லாமே முதுமையால் வருவதாக எண்ணுவது சரியில்லை.

உண்மை என்னவென்றால் முதுமை என்பது அனுபவத்தின் சுரங்கம். பிறர் என்ன நினைப்பார்கள் என்ற சிந்தனை இல்லாத காலகட்டம், விரும்பியவன வற்றை எல்லாம் செய்வதற்குக் கிடைத்திருக்கும் அற்புத வாய்ப்பு. எனவே, இந்த காலகட்டத்தையும் ஒரு புதிய வாய்ப்பாக பார்ப்பவர்கள் முதுமையை அனுபவித்து வாழ்கிறார்கள். முதுமை என்பது ஒரு கண்ணாடி போன்றது. அதாவது, அதில் என்ன பார்க்கிறீர்களோ, அதுவே தென்படும். ஆனந்தத்தைப் பார்த்தால் மகிழ்ச்சி கிடைக்கும். சோகத்தைப் பார்த்தால் துயரம் கிடைக்கும்.

பிரபல எழுத்தாளர்களின் முதுமை அனுபவம் சிறப்பா கவே இருந்திருக்கிறது. பிரபல எழுத்தாளர் கள் முதுமை குறித்து என்ன எழுதியிருக்கிறார்கள் என்று பாருங்கள்.

எழுத்தாளர் சுந்தர ராமசாமி

பதின்பருவத்துப் பிள்ளைகள் நம்மை முதியவர் களாக்குவதற்காக கடுமையாக உழைக்கிறார்கள். அவர்கள் செய்வதெல்லாமே தவறாகத் தோன்ற ஆரம்பிக்கும்போது முதுமை வந்துவிட்டது என்று அர்த்தம் கழிப்பறைக் கதவை காலால் உதைத்து திறப்பது, குளித்து துவட்டிய ஈரத்துண்டை உடைமாற்றிய இடத்திலேயே மிதிபட விட்டு விடுவது, சட்டையை கழற்றி புத்தகப்பையுடன் சேர்த்தே வீசுவது, சாப்பிட்ட தட்டை அங்கேயே உலரவிட்டுச் செல்வது, படுக்கையை தட்டாமல் நாள்கணக்கில் அதிலேயே தூங்குவது, சாத்தியமான உச்ச ஒலியில் சங்கீதம் கேட்பது என்பதெல்லாம் நாமே செய்தவைதான் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

ஓர் எளிய அறிகுறி, பாண்டை ஒருகால் உள்ளேயும் மறுகால் வெளியேயும் இருக்கும்படி கழற்றி கழற்றிய இடத்திலேயே விட்டுவிட்டு பாய்ந்தால் நீங்கள் பதின்பருவம். இருகால்களும் வெளியே இருக்க கழற்றி கட்டிலிலோ மேஜையிலோ போட்டால் இளமை. கழற்றி கச்சிதமாக மடித்து வைத்தால் முதுமை.

ஆண்களுக்கு எத்தனையோ சுய சோதனைகள் இருக்கின்றன. கல்யாணங்களில் காகிதக் கவரில் நூறு ரூபாய்த்தாளை செருகி மொய் வைப்பதில், குடையை கையில் வைத்திருப்பதில் கூச்சமில்லாதிருத்தல் போன்றவை நடுவயதுக்கான அடையாளங்கள். வீட்டுக்குள் நுழையும்போது கனைத்துக்கொண்டோ செருப்பைத் தேய்த்துக்கொண்டோ செல்கிறீர் கள் என்றால் முதுமையின் அடையாளம்

எழுத்தாளர் சுஜாதா

70 வயதைத் தொட்டபோதும் படைப்பாற்றலில் முதுமை சுஜாதாவை தொடவே இல்லை. முதுமை என்ன செய்யும் என்பதை ரொம்ப ஜாலியாக ஒரு கட்டுரையில் சொன்னார். மெரினா கடற்கரையில் பெஞ்சில் உட்கார்ந்த ஒரு தாத்தா, (சுஜாதாவே அப்ப 70

அனுபவம் புதுமை

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

வயசு தாத்தாதான்) ’யு ஆர் எ ரைட்டர். எனக்கு எத்தனை வயசு சொல்லுங்க பார்க்கலாம்’ என்றார். அவரைக் கட்டைவிரலால் மூக்கைத் தொடச்சொல்லி, மற்ற விரல்களை றெக்கை மாதிரி அசைக்க வைத்து, கைகளை ஏரோப்ளேன் மாதிரி விரிச்சு லேசா குதிக்கச் சொல்லிய பிறகு, ’இந்த மே 12 வந்தா வயசு 82’ என்றார் சுஜாதா. அந்தத் தாத்தாவுக்குத் தாத்தா ஆச்சர்யப்பட்டுப் போனார். ’என்ன ட்ரிக்கு இது’ என்றார் வியந்து. ’ஒரு ட்ரிக்குமில்ல சார். நேத்திக்குதான் இதே பெஞ்சில வந்து உட்கார்ந்து உங்க வயசு பர்த்டே எல்லாம் சொன்னீங்க. இப்ப மறந்துட்டீங்க.’ இதுதான் முதுமையின் சிக்கல்.



அனுபவம் புதுமை

எழுத்தாளர் சிவசங்கரி

எழுத்தாளர் சிவசங்கரியின் முதுமை அனுபவம் குறித்து பிரபல எழுத்தாளர் ராஜேஷ்குமார் எழுதியிருக்கும் பதிவு இது. என் சமகால எழுத்தாளர்களோடு அவ்வப்பொழுது நான் செல்போனில் தொடர்பு கொண்டு பேசுவது வழக்கம். அப்படி நான் அண்மையில் பேசிய ஒரு பெண் எழுத்தாளர் என்னை விட சீனியர்.நான் எழுத வந்த காலகட்டத்தில் அவர் தொடர்கதைகள் வராத வார இதழ்களே இல்லையென்று சொல்லலாம். அவருடைய வயது முதுமையைத் தொட்டு விட்டாலும் குரலில் அதே இளமையும் கம்பீரமும் இருந்தது.

"எப்படி இருக்கீங்கம்மா?"

நான் கேட்ட இந்த சிறிய கேள்விக்கு அவர் சொன்ன நீண்ட பதிலில் நாம் எல்லோரும் கற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு நிறைய விஷயங்கள் இருந்தன.

"நான் ரொம்ப நல்லா இருக்கேன் ராஜேஷ் குமார். என்னோட வயசுக்கு ஏற்ற மாதிரி சின்ன சின்ன உடல் உபாதைகள் இருந்தாலும் அதையெல்லாம் கண்டுக்காம நாட்களை சந்தோஷமா கழிச்சுட்டிருக்கேன். இந்த முதுமையை சிலர் வேண்டாத விருந்தாளியாய் நினைச்சு, "எனக்கு வயசாயிடுச்சு இனிமே நான் என்ன பண்ண போறேன்னு எதிர்மறை எண்ணங்களோடு ஒவ்வொரு நாளையும் பயந்து பயந்து வாழ்ந்துட்டு இருப்பாங்க.

எனக்கு அந்த பயமே கிடையாது. பயம்ங்கிறது நம்ம மனசுக்குள்ள இருக்கிற ஓட்டடை மாதிரி. அதையெல்லாம் தைரியமா நேர்மறை எண்ணங்களோடு துடைச்சு சுத்தப்படுத்தனும். அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம் நாம் எதுக்கும் எமோஷனல் ஆகக்கூடாது. பிறர் நம்மை பற்றி என்ன நினைப்பாங்களோன்னு நினைச்சு, கவலைப்பட்டு மன அமைதியை இழந்துடக் கூடாது. எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும், அதை தைரியமாக ஃபேஸ் பண்ணி ஜெயிக்கணும்.

மத்தவங்க வளர்ச்சியைப் பார்த்து நாம் பொறாமைப்படாமே அவங்களைப் பாராட்டணும். அப்படி பாராட்டும் போது அவங்க அடைகிற சந்தோஷத்தை பார்த்து நாம் சந்தோஷப்படணும். அந்த சந்தோஷம் தான் நம்ம உடம்பை ஆரோக்கியமாக வெச்சிருக்கும். மனசு சந்தோஷமா இருக்கும் போது, நமக்கு எந்த நோய் வந்தாலும் அது சீக்கிரமே குணமாயிடும். எனக்கு ரெண்டு தடவை ஹார்ட் அட்டாக் வந்தது. நான் பயப்படலை. அதுக்கு தீர்வான பைபாஸ் சர்ஜரியைப் பண்ணிகிட்டேன். இப்போ நல்லா இருக்கேன். ஹார்ட்ல எந்த ஒரு பிரச்சனையும் இல்லை.

போன மாசம் மூட்டு வலி வந்து ரொம்பவும் கஷ்டப்பட்டேன். அப்பவும் சலிச்சுக்கலை. எத்தனை வருஷமா என்னை தாங்கி பிடித்து எத்தனையோ இடங்களுக்கு கூட்டிட்டு போன என்னுடைய கால் களுக்கு நன்றிதான் சொன்னேன். மூட்டுக்கும் முழங்காலுக்கும் போதுமான ஓய்வு கொடுத்துல இப்ப நிம்மதியா இருக்கேன்" என்றார். முதுமை என்பது அச்சம் தருவதல்ல, அனுபவிக்க வேண்டியது என்பதையே இவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.



பிள்ளைகளின் ஆடம்பரச் செலவு எரிச்சல் தருதா..?

பிள்ளைகள் படிப்பு முடிந்து வேலைக்குப் போய் சம்பாதிக்கத் தொடங்கியதுமே அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான தொடர்பு முறிந்துவிடுகிறது என்பதே உண்மை. ஆனால், நம் பெற்றோர் திருமணம் முடித்துக் கொடுப்பதை தங்கள் கடமையாக நினைக்கிறார்கள். அதேபோல் பேரன், பேத்திகளை வளர்ப்பதும் தங்கள் கடமை என்றே நினைக்கிறார்கள்.

உண்மைஎன்னவென்றால்திருமணத்திற்குப் பிறகும் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது பொறுப்புகள் எடுப்பதே நிறைய வெறுப்புகளுக்குக் காரணமாகிறது. ஆகவே, பிள்ளைகளுக்குத்திருமணம்முடித்துக்கொடுத்தவர்கள் கீழ்க்கண்ட வழிகளைப் பின்பற்றினால் அவர்கள் வாழ்க்கையும் பிள்ளைகள் வாழ்க்கையும் இனிமையாக நகரும்.

www.gyaanaguru.com

மந்திரச்சொல்

கவனிக்கப்படுவதற்கும்,
கண்காணிக்க
படுவதற்கும்
நூலளவு தான்
வித்தியாசம்

- வாழ்க்கை முழுவதும் ஏதேனும் ஒரு பிள்ளையை சார்ந்தே வாழ வேண்டும் என்ற நினைப்பில் இருந்து வெளியே வாருங்கள்.
- பேரக்குழந்தைகளின் மேல் பெற்றவர் களுக்கு மட்டுமே உரிமை உண்டு. மற்றவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை மறக்கவேண்டாம்.
- குழந்தை வளர்ப்பில் மகனுக்கோ மகளுக்கோ எவ்வித அறிவுரையும் சொல்லாதீர்கள். உங்கள் அறிவுரை மற்றும் அனுபவங்களை அவர்கள் மதிக்க மாட்டார்கள
- முடிந்த வரையிலும் விலகியே இருங்கள் உறவுகள் இனிமையாகத் தான் இருக்கும். சிறகு முளைத்த பறவைகள் அவர்கள் என்பதை நினைத்து அமைதியாக இருங்கள்
- உங்களுக்கென சேமிப்பு வைத்திருங்கள். பணம் இல்லாதவர்களுக்கு பிள்ளைகளிடம் மதிப்பும், மரியாதையும் கிடைக்காது. சேமிப்பு மற்றும் உங்கள் சுய சம்பாத்திய சொத்துக்களை உயிருடன் இருக்கும் வரை யாருக்கும் பகிர வேண்டாம்.
- காலம் முழுதும் பிள்ளைகள் நலனுக்கு கடுமையாக உழைத்திருப்பீர்கள், நிறைய இழப்புகளை சந்தித்து இருப்பீர்கள். ஆனால், அவற்றை திரும்பத் திரும்ப சொல்லி காட்ட வேண்டாம். அவை எல்லாமே பெற்றோரின் கடமைகள் மட்டுமே.
- கூட்டு குடும்ப வாழ்வு என்பது இப்போது நடைமுறையில் இல்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள்.
- மகன் அல்லது மகளுக்கு ஆதரவு கொடுத்து தங்கள் கணவன் அல்லது மனைவியை மட்டம் தட்டவோ, அவமானப் படுத்தவோ செய்யாதீர்கள். தம்பதிக்குள் ஒற்றுமை இல்லை என்றால் இருவருக்கும் மதிப்பு இருக்காது.
- பிள்ளைகள் வீட்டிற்கு செல்லும்போது உங்களுக்குத் தேவையான மருந்து மாத்திரை, எண்ணெய், பவுடர், சீப்பு, சோப் போன்றவற்றை எடுத்துச் செல்லுங்கள்
- பிள்ளைகளின் ஆடம்பர வாழ்க்கையை விமர்சிக்க வேண்டாம். அவர்கள் விரும்பிய வாழ்க்கையை அவர்கள் வாழட்டும்.
- பிள்ளைகள் உங்களை விட அறிவிலும், திறமையிலும் அவர்கள் சிறந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லது, நீங்கள் முட்டாள்களாக நடியுங்கள்.

www.gyaanaguru.com

படிவம்

பெயர்
ஆண்/பெண்
பிறந்த தேதி
மதம்
சாதி
தாழ்த்தப்பட்டவரா?
ஆம் எனில்
யாரால்? எப்போது?

- ராசி. பன்னீர்செல்வன்

கவித்துவம்

www.gyaanaguru.com

இரண்டாவது குழந்தை கண்டிப்பா பெத்துக்கணுமா..?

மரத்தடியில் அசந்து தூங்கிக்கொண்டிருந்த ஞானகுருவின் அருகில் அமர்ந்தார் மகேந்திரன். கண்களைத் திறக்காமலே, ‘‘மகேந்திரா... உங்கள் மனதை அரித்துக்கொண்டிருக்கும் சந்தேகத்தைக் கேட்டுவிடுங்கள்’’ என்றார் கண்களைத் திறக்காமலே. ’’மகனுக்கு கல்யாணமாகி ரெண்டு வயசுல ஒரு பிள்ளை இருக்குது. அடுத்த பிள்ளை இப்பவே பெத்துக்கிட்டா ஈசியா வளர்த்திடலாம்... நாங்க ஆரோக்கியமா இருக்கும்போதே உதவி செய்வோம்னு சொல்றேன். அவன் ஏழெட்டு வருஷம் போகட்டும்னு அசால்ட்டா சொல்றான். அத்தனை வருஷ இடைவெளியில பிள்ளை பெத்துக்கிறது சரியா இருக்குமா..? ரெண்டாவது பிள்ளை பெத்துக்காம சாக்குப்போக்கு சொல்லி தள்ளிப் போடுறானான்னு எனக்குப் புரியலை’’ என்றார் மகேந்திரன்.

’’நீங்கள் கேட்டது ஒரு தவறான கேள்வி. இரண்டாவது பிள்ளை வேண்டுமா இல்லையா என்பது உங்கள் மகனும் அவரது மனைவியும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டிய முடிவு. அதில் நீங்கள் தலையிடுவதற்கு எந்த அவசியமும் இல்லை, தேவையும் இல்லை’’ என்றார் ஞானகுரு.

‘‘ஆனா... ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரெண்டு பிள்ளை கண்டிப்பா வேண்டும்தானே... அப்பத்தானே ஒரு குடும்பம் முழுமை அடையும்?’’

‘‘திட்டமிடாமல் பிறந்தவர்களே இரண்டாவது குழந்தையாக பெரும்பாலான வீடுகளில் இருக்கிறார்கள் என்பதே உண்மை. முதல் குழந்தைக்கு மட்டுமே

எத்தனை வருட இடைவெளி நல்லது

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 4 - 5

நிறுவனர்
எஸ்.கே.முருகன்

ஆசிரியர்
எம்.நிர்மல்

வெளியீட்டாளர்
எம்.நிலா

வடிவமைப்பு
வி.கிராபிக்ஸ்
கே.எம்.பிரசன்னா

நிர்வாக இயக்குனர்
அரசு கிருத்திகா

முதன்மை செயல் அலுவலர்
மணியன் கலியமூர்த்தி

ஒருங்கிணைப்பாளர்
ரத்தினபாண்டியன்

ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
தொடர்புக்கு: +91 98409 03586, 72997 53999, 98844 53014
இ.மெயில் : skmnila1@gmail.com
இணையதளம் : www.gyaanaguru.com

www.gyaanaguru.com

போன மாசம் மூட்டு வலி வந்து ரொம்பவும் கஷ்டப்பட்டேன். அப்பவும் சலிச்சுக்கலை. எத்தனை வருஷமா என்னை தாங்கி பிடித்து எத்தனையோ இடங்களுக்கு கூட்டிட்டு போன என்னுடைய கால்களுக்கு நன்றிதான் சொன்னேன். மூட்டுக்கும் முழங்காலுக்கும் போதுமான ஓய்வு கொடுத்துல இப்ப நிம்மதியா இருக்கேன்'' என்றார்.

ஆர்வமுடன் காத்திருக்கிறார்கள், திட்டமிடுகிறார்கள். இரண்டாவது குழந்தை என்ற முடிவு பெண்ணின் உடல் நலம், குடும்ப பொருளாதார நிலை, எதிர்காலத் திட்டங்கள், வாழ்க்கைச் சூழல் போன்ற பலவற்றையும் யோசித்தே முடிவு எடுக்க வேண்டும்.

முன்பு கடவுள் கொடுக்கிறான் என்று பிள்ளைகளை வதவதவென பெற்றுக்கொண்டே இருந்தார்கள். கருப்பை வாசலை அடைப்பதற்கு வழி கண்டுபிடிக்கப் பட்ட பிறகு இந்த எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இப்போது ஒரு பிள்ளை போதும் என்ற அளவுக்கு வந்திருக்கிறது. ஒரு பிள்ளை, இரண்டு பிள்ளை என்பது ஒவ்வொரு நபரின் வாழ்க்கைக்கும் ஏற்ப மாறக்கூடியது. ஒரு குழந்தை என்றால் நல்லது இரண்டு குழந்தை என்றால் மிகவும் நல்லது" என்றார் ஞானகுரு.

"நீங்கள் சொல்வது சரி என்றே வைத்துக்கொள்வோம். இரண்டாவது பிள்ளை பெறுவது என்ற முடிவு எடுத்தவர்கள் உடனடியாக அடுத்த பிள்ளை பெற்றுக் கொள்வதுதானே வளர்ப்பதற்கு எளிதாக இருக்கும்..."

"முதல் பிரசவத்திற்குப் பிறகு தாய் இழந்த இரும்புச் சத்து, கால்சியம் போன்ற ஊட்டச்சத்துக்களை மீண்டும் பெறுவதற்கு மூன்று வருடங்கள் ஆகிறது. எனவே, குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் இடைவெளி நல்லது.. அதோடு முதல் குழந்தையை கவனித்து வளர்ப்பதற்கும், கல்விக்கு ஆதரவு கொடுப்பதற்கும் சில ஆண்டுகள் தேவை. அதனால் முதல் குழந்தைக்குத் தாயின் நேரடி பராமரிப்புக்குத் தேவைகள் குறைந்த பிறகு அடுத்த குழந்தைக்குத் திட்டமிடுவது நல்லது"

"அப்படியென்றால் ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு இரண்டாவது பிள்ளை பெற்றுக்கொண்டால் போதும் என்கிறீர்களா..?"

"முதல் பிரசவத்தின் தன்மை, குழந்தை வளர்ப்பு அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் அடுத்த குழந்தைக்குத் தாயும், தந்தையும் யோசித்துத் திட்டமிட வேண்டும். இரண்டாவது குழந்தைக்கு 7 வயது ஆகிவிட்டால் போதிய பராமரிப்பு கொடுத்த திருப்தி நிச்சயம் இருக்கும். அதோடு, அடுத்த பிள்ளையை வரவேற்பதற்கு மூத்த பிள்ளையையும் பெற்றோர் தயாராக்க முடியும். இந்த வகையில் இரண்டாவது குழந்தையை வளர்க்க அம்மா, அப்பா, மூத்த பிள்ளை என்று மூன்று பேர் இருப்பார்கள். மூத்த பிள்ளைக்கு அடுத்த பிள்ளையின் மீது அன்பு, பொறுப்பு, அக்கறை போன்றவை ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு.

மேலும், அதிக இடைவெளி காரணமாக பொருளாதார பிரச்னைகளும் குறைகின்றன. அதாவது பிள்ளைகள் இரண்டு பேருக்கும் ஒரே நேரத்தில் கல்லூரிக் கட்டணம், திருமணம் போன்ற பெரிய செலவுகள் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. இப்படி தாமதமாக குழந்தை பெறுவதில் சில பிரச்னைகளும் உண்டு. ஏழெட்டு வருடங் களுக்குப் பிறகு, ஆசைப்பட்ட வகையில் உடனடியாக குழந்தை பெற்றுக் கொள்வதற்கு உடல்நிலை ஒப்புக் கொள்ளாது. கர்ப்பம் தரிப்பதற்குத் தாமதம் ஆகலாம். மேலும், தாய் அல்லது தந்தைக்கு 35 வயதுக்கு மேல் நீரிழிவு, ரத்தக்கொதிப்பு போன்ற நோய்கள் தோன்றிவிடுவதால், பிள்ளைக்கும் அந்த பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகமா கிறது. சாப்பிடாமல், தூங்காமல் பிள்ளை வளர்ப்பதற்கு இந்த வயதில் பொறுமை இருப்பதில்லை.

எனவே, இத்தனை பிரச்னைகளையும் அலசிப்பார்த்து, இனி பிள்ளை வேண்டாம் என்ற முடிவுக்கு வரும் வாய்ப்பு அதிகம். தாமதமாக குழந்தை பெறுவதில் தம்பதிக்கு மட்டும் இல்லாமல் மூத்த பிள்ளைக்கும் பிரச்னை உண்டாகலாம். இரண்டாவது பிள்ளையை எல்லா நேரமும் தூக்கிவைத்து மிகுந்த அக்கறையுடன் கவனிப்பதைக் காணும் மூத்த பிள்ளைக்கு பொறாமை, வெறுப்பு தோன்ற லாம்..."

"சின்னப் பிள்ளைக்கும் பொறாமை வருமா..?"

''நிச்சயம் வரும். தன்னை மட்டுமே கொஞ்சிக் கொண்டிருந்த தாயும், தந்தையும் சின்ன பிள்ளையுடன் அதிக நேரம் செலவிடுவதைக் காண்கையில் மூத்த பிள்ளைக்கு வருத்தம் வரும், தனியே இருப்பதாக உணரும். ஆகவே, இந்த காலகட்டத்திற்கு முதல் பிள்ளையை உணர்வுபூர்வ மாக முன்கூட்டியே தயார் படுத்த வேண்டும். அதாவது, உனக்குத் துணையாக ஒரு பாப்பா வரப்போகிறது, நீயே பிள்ளையை நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டும், விளையாட்டு காட்ட வேண்டும். நீ தான் பொறுப்பாக அம்மாவுக்கு உதவி செய்ய வேண்டும் என்று மூத்த பிள்ளையை தயார் செய்ய வேண்டும்.

சின்னப் பிள்ளையைக் கொஞ்சும் நேரத்தில் பெரிய பிள்ளையையும் கொஞ்ச வேண்டும். இரண்டு பிள்ளைகளுக்கும் வயது வித்தியாசம் இருப்பதால் இருவருக்கும் சண்டை வருவதற்கு வாய்ப்பு குறைவு... விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மூத்த பிள்ளைக்கு வந்துவிடும்" என்றார் ஞானகுரு.

"முடிவா என்ன சொல்ல வர்றீங்க..?"

"தம்பதிகள் மட்டுமே முடிவு செய்ய வேண்டும், நீங்களும் நானும் அல்ல..." என்றார் ஞானகுரு.

www.gyaanaguru.com

சிரிக்கச் சொல்றது குத்தமாய்யா

1 ஆண் எனும் தெய்வப்பிறவி

ஆண்கள் எல்லாரும் ரொம்ப நல்லவர்கள்னு சொன்னா நம்ப மாட்டீங்க. ஆனா, படிச்சுப் பாருங்க. நிச்சயம் நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்.

- எத்தனை மோசமான பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லை நேரில் ஐ லவ் யூ சொன்னால் கோபப்படுவது, செருப்பைக் கழட்டுவது போன்றவைகளை எந்த ஆணும் செய்வதே இல்லை.
- ஆண்கள் சீட்டில் பொண்ணுங்க உட்கார்ந்திருந்தால் கண்டக்டரிடம் எந்த ஆணும் புகார் சொல்வதில்லை. பரிதாபமாக பார்ப்பதோடு சரி.
- மனைவி எம்புட்டு அடிச்சாலும் ஆண்கள் சத்தம் போட்டு அழுவதே இல்லை.
- சொத்து வாங்கினால் மனைவி, பிள்ளை பெயரில் வாங்குவார்கள். எல்.ஐ.சி. பாலிசி மட்டும் ஆண்கள் பெயரில் இருக்கும்.
- யாராவது ஒரு பெண் லிஃப்ட் கேட்டால் வேறு வழியில் செல்ல வேண்டிய அவசரம் இருந்தாலும் அந்த பெண்ணை பொறுப்பாக கொண்டு போய் விடுவார்கள்.
- எந்த ஒரு அப்பனும் மகனிடம், “மருமகப்பொண்ணு உன்னை நல்லா பாத்துகிறாளாப்பா.." என்று சந்தேகம் கேட்பதே இல்லை.
- வெளிநாட்டு மாப்பிள்ளை போன்று வெளிநாட்டு மணப்பெண்ணை எந்த ஆணும் தேடுவதில்லை.
- ஆண்களுக்கு வயிறு பசித்தாலும் சீரியல் பார்க்கும் நேரத்தில் பெண்களை தொந்தரவு செய்வதே இல்லை.
- என் செல்போனுக்கு ரீசார்ஜ் செஞ்சுடு என்று எந்த பெண்ணிடமும் ஆண் சொல்வதே இல்லை.

2 இன்னைக்கு நல்ல நாள்

கணவன் காலையில் கண் விழித்ததும் மனைவியிடம், ‘இன்னைக்கு ரொம்பவும் நல்ல நாளும்மா...’ என்றான். அவள் கண்டுகொள்ளாமல் போனாள்.

அடுத்த நாளும் காலையில் கண் விழித்ததும் மனைவியிடம், ‘‘இன்னையும் நல்ல நாளுதான்’ என்றான். அவன் சொன்னதை மனைவி வினோதமாகப் பார்த்தாலும் கண்டுகொள்ளவில்லை.

திரும்பத் திரும்ப தினமும் காலையில் இப்படி சொல்லத் தொடங்கினான் கணவன். ஒரு நாள் மனைவிக்கு ரொம்பவே கடுப்பாகி விட்டது. அவள், “தினமும் இன்னைக்கு நல்ல நாளுன்னு சொன்னா என்ன அர்த்தம்?’ என்று கேட்டாள்.

அதைக் கேட்டவன், ‘போன வாரம் நமக்குள்ள சண்டை வந்தப்ப நீ என்ன சொன்னேன்னு நினைச்சுப் பாரு. நான் இதே மாதிரி பேசிக்கிட்டு இருந்தா ஒரு நல்ல நாள் பார்த்து அம்மா வீட்டுக்குக் கிளம்பிடுவேன்னு சொன்னே. அதைத்தான் உனக்கு இத்தனை நாளும் மறைமுகமாக சொல்லிக்கொண்டு இருக்கிறேன்’ என்றபடி சிரித்தான். அப்புறமென்ன, கணவன் பலமான காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

சிரிக்கச் சொல்றது குத்தமாய்யா

3 ஒரு பஸ் இரண்டு பெண்கள்

ஒரு பஸ்ஸில் ஜன்னலோர சீட்டில் இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். பஸ் போய்க் கொண்டிருந்தது. அதில் ஒரு பெண் "யோவ் கண்டக்டர் இங்கே வாய்யா... இந்த ஜன்னலக் கொஞ்சம் திறந்து வைத்து விட்டுப் போ" என்றாள்.

கண்டக்டர் வந்து ஜன்னலை திறந்து வைத்து விட்டுப் போனார். அந்தப் பெண்ணுக்கு அடுத்து உட்கார்ந்திருந்த பெண் "யோவ் கண்டக்டர் இங்கே வாய்யா... வந்து இந்த ஜன்னலை சாத்தி விட்டுப் போய்யா" என்றாள்.

"என்னம்மா அந்தம்மா ஜன்னலை திறந்து வைக்கச் சொல்லுது நீங்க ஜன்னலை சாத்தி வைக்கச் சொல்றீங்க கொஞ்ச நேரம் அட்ஜஸ்ட் பண்ணி பிரயாணம் பண்ணக் கூடாதா?" என்று கண்டக்டர் கேட்டதும் முதல் பெண் சொன்னாள் "இங்கே பாரு நீ ஜன்னல அடைச்சன்னா நான் மூச்சு முட்டி செ‘த்துப் போவேன்" என்றாள்.

இரண்டாவது பெண், "இங்கே பாரு நீ ஜன்னல திறந்து வச்சின்னா நான் குளிர்ல விறைச்சி செத்துப் போவேன்" என்றதும் கண்டக்டர் என்ன செய்றதுன்னு திகைச்சி நின்னுகிட்டிருந்தப்ப, கடைசி சீட்டில் பீடி குடிச்சிகிட்டிருந்த ஒரு மனுசன் கண்டக்டரை கூப்பிட்டு, "அங்கே என்ன பிரச்னை" என்று கேட்டான்.

கண்டக்டர் அச்சத்துடன், “அதை ஏன் கேட்கிற ஒரு அம்மா ஜன்னல அடைச்சா மூச்சு முட்டி செத்துப் போவேங்குது. இன்னொரு அம்மா ஜன்னல திறந்து வச்சா குளிர்ல விறைச்சி செ‘த்து போவேங்குது. ஒருத்தருக்கு ஒருத்தர் அட்ஜஸ்ட் பண்ணிப் போகக் கூடாதா கொஞ்ச நேரத்தில் இறங்கப் போறாங்க அதுக்குள்ள இப்படி சண்டை போட்டுகிட்டா என்ன செய்றது". என்று புலம்பினார்.

அதற்கு அந்த மனுசன் "நான் ஒரு யோசனை சொல்லவா? கொஞ்ச நேரம் ஜன்னலை அடைச்சி வை, அந்த அம்மா செ‘த்துப் போகும், அப்புறம் கொஞ்ச நேரம் ஜன்னலை திறந்து வை இந்தம்மா செ‘த்துப் போகும் நாம நிம்மதியா போகலாம்" என்றான்.

"நல்ல ஆளுய்யா நீ... அவங்க ரெண்டு பேரும் செத்துப் போனா அந்தப் பொம்பளைகளோட புருசங்கக்கிட்டே நான் என்னய்யா பதில் சொல்றது. என்னை தூக்கி அவன் மிதிக்கிறதுக்கா?" என்று கேட்டார். அதற்கு, "அதைப் பத்தி நீ கவலைப் படாதே அந்த ரெண்டு பொம்பளைகளோட புருசன் நான் தான்.." என்றான்.

சிரிக்கச் சொல்றது குத்தமாய்யா

தினமும் 24 ஆயிரம் ரூபாய் போதுமா..?

மாலை நேரத்தில் ஆற்றின் கரையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார் ஞானகுரு. அவரை சந்திக்க வந்த மகேந்திரன், “டயம் மேனேஜ்மென்ட்ன்னு சொல்றாங்க, நேரத்தை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது எப்படி? நேரத்தைக் கட்டுப்படுத்தினால் பணம் வருமா?” என்று கேட்டார்.

”தினமும் 24 ஆயிரம் ரூபாய் உனக்குக் கொடுத்தால் அதை எப்படி செலவழிப்பாய்..?”

‘’அதெப்படி, அவ்வளவு பணம் யார் தருவார்கள்..?’’ ஆச்சர்யத்துடன் கேட்டார் மகேந்திரன்.

“மக்கள் பணத்தைப் பார்த்துப் பார்த்து செலவழிக்கிறார்கள். அதாவது உணவு, உடை, மருத்துவச் செலவு, சேமிப்பு என்று கணக்குப் பார்த்து, திட்டமிட்டு கையில் இருக்கும் பணத்தை செலவு செய்கிறார்கள். ஏனென்றால், பணம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறார்கள். கொஞ்சமாக இருக்கும் பணம் வெட்டியாகச் செலவு ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே பார்த்துப்பார்த்து செலவழிக்கிறார்கள்.

அதேநேரம், மனிதருக்கு நேரம் இலவசமாகக் கிடைக்கிறது. எனவே, அதன் அருமை தெரியாமல் 24 மணி நேரத்தையும் தங்கள் விருப்பத்துக்கு வீணாகச் செலவழிக்கிறார்கள். ஒவ்வொரு மணி நேரத்தையும் பணம் என்றே கணக்குப் போட வேண்டும்.

அதாவது, கண் விழிக்கும் ஒவ்வொரு நாளும் 24 ஆயிரம் ரூபாய் கையில் இருப்பதாக எண்ணிக் கொள்ள வேணும். அந்த பணத்தை கணக்குப் போட்டு செலவழிக்க வேண்டும். வீணாக பொழுதைக் கழிக்கும் ஒவ்வொரு நிமிடமும் நமது பணம் நஷ்டம் அடைகிறது என்று எண்ணம் வர வேண்டும். பணம் போன்று நேரத்தையும் வீண் செய்யக்கூடாது என்ற எண்ணம் வந்து விட்டால் நேரம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். நேரத்தைக் கட்டுப்படுத்த அறிந்துகொண்டால் பணமும் கட்டுக்குள் வந்துவிடும்” என்றார் ஞானகுரு.

“நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பொழுது போக்குக்கு ஒரு மணி நேரம் கூட செலவிடக் கூடாதா..?”

‘’மகிழ்ச்சிக்கு எத்தனை லட்சம் வேண்டு மானாலும் செலவழிக்கலாம். பொழுதுபோக்கு மூலம் கிடைக்கும் மகிழ்ச்சி உடலுக்கும் மனதுக்கும் நன்மை செய்யக்கூடியது. எனவே, அதற்கு தாராளமாக செலவு செய்யுங்கள். தூங்கும் நேரத்திற்கும் லட்சக்கணக்கில் செலவழிக்கலாம்” என்றார் ஞானகுரு.

நேர மேலாண்மை

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும். ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைப வருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி:
Gyanaguru Publication, Union Bank of India,
Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் -
9840903586, 7299753999

பெண் கனவை திருமணம் சிதைக்குமா..?

பணம் சம்பாதிக்கும் பெண்களுக்கு திருமணம் என்ற வார்த்தை ரொம்பவே பயமுறுத்துகிறது. தங்களுடைய ஆசை, கனவு, லட்சியம் போன்ற எல்லாவற்றையும் திருமணம் உடைத்துவிடும் என்று அஞ்சுகிறார்கள். அதனாலே மாப்பிள்ளைக்கு எக்கச்சக்க நிபந்தனைகள் விதிக்கிறார்கள்.

இன்றைய மாடர்ன் பெண்களுக்குக் கல்யாண வாழ்க்கை தேவையா...? தோழர் வர்த்தினி பர்வதாவின் பதிவில் இதற்கு ஒரு தெளிவான பதில் இருக்கிறது. படித்துப் பாருங்கள்.

"திருமணம் ஒரு பெண்ணின் எதிர்காலக் கனவுகள், தேடல்கள் எல்லாத்துக்கும் முற்றுப்புள்ளி தானா? வாழ்க்கைல விட்டுக் கொடுத்து போறதுங்கிற பேரில் நாம எல்லாத்தையும் பறிகொடுத்துட்டு உப்புச்

நிபந்தனைகளின் மறுபக்கம்

பெண் கனவை திருமணம் சிதைக்குமா..?



சப்பில்லாத வாழ்க்கையைத்தான் வாழணுமா?

அப்படில்லாம் இல்லன்னு இத்தனை வருட வாழ்க்கை அனுபவத்தில், இப்ப எனக்குத் தோணுது. நம்ம கனவு பத்தி, நமக்குத் தெளிவான புரிதலும், தேடலும் இருந்தா, அந்தக் கனவை துரத்திப் பிடித்து, நனவாக்கி, அதோட பயணிக்கிற வாழ்க்கையை சந்தோசமா வாழமுடியும்னு நினைக்கிறேன்.

திருமணம்தான் வாழ்க்கையின் destiny, end point or final achievement அப்படின்னு நினைக்காம, வாழ்க்கையில் அதுவும் ஒரு அங்கம்னு நெனைச்சு, திருமணம் செய்துகிட்டு, ஜாலியா அந்த வாழ்க்கையையும் explore பண்ணுங்கன்னு தான் நான் என் இளந்தோழர் களிடம் சொல்லுவேன்.

ஒரு பெண்ணுக்கோ, ஆணுக்கோ, திருமணம்ங்கிறது வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே. அதுவே முழு வாழ்க்கையில்லை. அதோட வாழ்க்கை முடிஞ்சு போற விதி, அழிக்க முடியாத தலையெழுத்து - அப்படில்லாம் இல்லை. வாழ்க்கையில் திருமண வாழ்க்கையும் வேணும்னு நெனைச்சா, அது ஒரு பகுதி மட்டும்தான். வாழ வேண்டிய, explore பண்ண வேண்டிய மீதி வாழ்க்கையும் இருக்கு.

குடும்பம், குழந்தை, உறவுகள் தாண்டி, ஒவ்வொருத்தருக்கும் தனிப்பட்டு, தானே வாழ்ந்து பார்க்க வேண்டிய சமூக வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்கு. குடும்பத்திற்குள் யாரும் யாரையும் இறுக்கி, கழுத்தைப் பிடிக்காம, தன்னியல்பில், தள்ளி வாழவும் தெரிஞ்சிக்கிட்டா, ரொம்ப எளிதா. (அல்லது யாரையும் காயப்படுத்துகிற / காயப்பட்டுக்கிற வலியில்லாம,) நம்முடைய வேலை, குடும்பம், கனவு, லட்சியம், ஆசைகள்.... இப்படி சவால்களைச் சமாளிக்கிற அரசியல் சூட்சுமம் பிடிபட்டுவிடும்.

ஆனால், இந்த அரசியல் சூட்சுமம் பிடிபட நான் நிறைய, நிறையவே அனுபவப்பட்டேன். எதிர்பார்ப்பு, ஏமாற்றம், அழுகை, கோபம், வெறுப்பு, விரக்தின்னு வாழ்க்கை பாராபோலாவில் உச்சியில் ஏறி, இறங்கி, அப்புறம் கடந்த இருபது ஆண்டுகளாக மெல்ல கோபம் குறைத்து, எதிர்பார்ப்புகளைத் துடைத்தெறிந்து, ஏமாற்றம், அழுகை எல்லாவற்றையும் சிரித்தபடியே விழுங்கக் கற்று, சமதளத்திற்கு அநேகமா வந்தாச்சு.

இப்படியாக, ஜனநாயகத் தன்மையற்ற இந்த குடும்ப அரசியலில், கனவையும் குடும்பத்தையும் பாலன்ஸ் பண்ணுகிற நகாசு வேலை தெரிஞ்சா போதும். பழகின ரோட்டில், வண்டிக்காரன் இல்லாமல், தானே ஓடுகிற வண்டியாய் வாழ்க்கை தானா ஓடும். ஆக, இந்த முப்பத்தியாறு வருட திருமண வாழ்க்கையில், தானாய் ஓடுகிற மாடாய் வாழ்க்கையை ஓட விட்டாச்சு என்பது தான் இந்தச் சமூகத்திற்கு நான் சந்தோசமாய்ச் சொல்லிக் கொள்வது. அன்புங்கிறது யாரையும் இறுக்கிப் பிடிச்சு, கட்டிப் போட்டு வச்சுக்கிறதில்ல. நிபந்தனையற்ற அன்பில், விடுதலை உணர்வில் நிறைகிறது வாழ்க்கை. ஆம், அவரவர் வாழ்க்கை அவரவர் கைகளில் இருக்கிறது. அதை யாரும் பறிக்கவும் முடியாது, கொடுக்கவும் முடியாது. பெண்ணும் ஆணும் இணைந்து உயிர் உருவாக்குதலே இயற்கை இட்டிருக்கும் பணி. அதனை செம்மையாக செய்து முடிப்போம். அதுவே மகிழ்ச்சி.

ஞானகுரு பதில்கள்

? மனிதர்களின் எந்த செயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்..?

- சி.ஷைலஜா, சென்னை.

ஞானகுரு :

உலகளவில் உற்பத்தி செய்யப்படும் மூன்றில் ஒரு பங்கு உணவு வீணாகிறது அல்லது கழிவாக தூக்கி வீசப்படுகிறது என்று ஐ.நா. சமீபத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதோடு 53 நாடுகளில் பசியும் பட்டினியும் அதிகரித்து வருவதாகவும் எச்சரிக்கை செய்திருக்கிறது.

ஆனால் நம் நாட்டில் கல்யாணம், வரவேற்பு போன்ற விழாக்களில் தினமும் எக்கச்சக்க உணவு வீணடிக்கப்படுகிறது. பணம் கொடுத்து வாங்கும் உணவு சுமாராக இருந்தாலும் முழுமையாக சாப்பிடும் மனிதர்கள், கல்யாணம் போன்ற விழாக்களில் இலையில் பாதிக்கும் மேலான உணவை சாப்பிடாமல் மீதம் வைத்து குப்பைக்குப் போடுகிறார்கள். பந்தியில் வைக்கப்பட்டிருக்கும் உணவு என்பது பணத்தின் இன்னொரு வடிவம். அந்த உணவு பரிமாறப்பட வில்லை என்றால் வேறு யாரேனும் ஒருவரது பசியைப் போக்கியிருக்கலாம். எனவே, என்ன காரணத்துக்காக உணவை வீணாக்கினாலும் அது கோபமூட்டும்

செயலாக இருக்கிறது. விசேஷ வீடுகளில் மட்டுமின்றி கோயில்களில் அபிஷேகம் என்ற பெயரில் பால், நெய், தயிர், பழங்களை ஊற்றி வீணாக்குவதைப் பார்க்கையி லும் ஹோமம் என்ற பெயரில் தீ வளர்த்து நெய் உள்ளிட்டவைகளை வீணாக்கும் முட்டாள்தனத்தைப் பார்க்கையில் கோபம் வருகிறது. இவை எல்லாவற்றையும் விட பாலாபிஷேகம் என்கிற பெயரில் நடிகர், நடிகைகளின் உயிரற்ற கட் அவுட் மீது பால் ஊற்றி வீணாக்குகிறார்கள். அத்தியாவசிய உணவுப் பொருட்களை வீணடிப்பது விவசாய பெருமக்களின் உழைப்பை அவமானப்படுத்தும் செயல் ஆகும்.

? அறிவுரைகள் தற்போது ஏற்கப்படு வதில்லை போல் தோன்றுகிறதே..?

- பி.மணிவண்ணன், சூலக்கரை.

ஞானகுரு :

காலங்காலமாக அறிவுரைகள் சொல்லப்பட்டுத்தான் வருகின்றன. ஆத்திச்சூடி திருக்குறள், நீதி நூல்கள் என்று அறிவுரைகளுக்கு ஒருபோதும் பஞ்சமே இல்லை. பகவத் கீதை, பைபிள், குரான் போன்ற நூல்களும் அதற்காக உருவாக்கப்பட்டவையே. உண்மையில் மனிதர்களுக்குத் தேவை ஆலோசனைகளே தவிர, அறிவுரைகள் அல்ல. ஏனென்றால், ஒவ்வொரு நபருடைய பிரச்னைகளும் சிக்கல்களும் வெவ்வேறானவை. எப்படியாயினும் கேட்காத நேரத்தில் யாருக்கும் ஆலோசனையும் அறிவுரையும் கொடுக்காதீர்கள். அது, உறவைக் கெடுத்துவிடும்.

? பெண்கள் எளிதில் அழுதுவிடுகிறார்களே, ஏன்..?

- சி.சரவணன், மணிநகரம்.

ஞானகுரு :

பெண்கள் எல்லோரிடமும், எல்லா இடங்களிலும் அப்படியெல்லாம் கலங்கிவிடுவதில்லை. பெரும்பாலும் மனதுக்கு நெருக்கமான நபர்களிடம்தான் அப்படி நடந்துகொள்கிறார்கள். அதேநேரம், புரோலாக்டின் என்ற ஹார்மோன் ஆண்களைவிட பெண்களுக்கு 60 சதவிகிதம் அதிகமாகவே சுரப்பதும் ஓர் அறிவியல் காரணம். அதனால்தான், சட்டென்று கண்ணீர் சிந்தி எதிராளியை அதிரவைக்க முடிகிறது. ஒரு சில பெண்கள், சண்டையை முடிவுக்குக் கொண்டுவரும் ஆயுதமாக இந்த கண்ணீரை பயன்படுத்துவது உண்டு.

www.gyaanaguru.com

? இயற்கையை மதித்து வாழும் மனிதர்களும் வீட்டு பிரசவத்தை எதிர்க்கிறார்களே..?

- ஜி.ராஜி, மதுரை.

ஞானகுரு ;

மனிதர்கள் மதிக்க வேண்டும் என்று இயற்கை ஒரு போதும் கட்டளை போட்டதில்லை. மதிக்கும் மனிதர் களுக்கு நன்மையும் மதிக்காதவர்களுக்குத் தீமையும் இயற்கை செய்வதில்லை. எனவே இயற்கை வழிமுறை எனும் பெயரில் மனிதர்கள் குறிப்பாக பெண்ணின் உயிருடன் யாரும் விளையாட வேண்டியதில்லை. நாய், பூனை, ஆடு, மாடு போன்று பெண்ணாலும் குழந்தை பெற்றுக்கொள்ள முடியலாம். ஆனால், குறை பிரசவம், பிரசவ அச்சம், பிரசவச் சிக்கல் போன்றவை மனிதகுலத் துக்கு உரித்தானது. பிரசவத்தில் ஏற்படும் உயிரிழப்புகள் மருத்துவமனையாலே மிகவும் குறைந்துள்ளன. காடு முழுவதும் சுற்றித்திரிந்து குகையிலும் பொந்துகளிலும் வாழ்ந்துவந்த மனிதர்கள் இப்போது நாகரிகம் அடைந்து வீட்டுக்குள் அடைந்துகிடக் கிறார்கள். எனவே, இன்றைய மனிதர்களுக்கு வீட்டு பிரசவம் தேவையில்லை. வீட்டு பிரசவத்துக்கு ஆதரவு கொடுக்கும் மனிதர்கள் இயற் கைக்கு ஆதரவு தரும் வகையில் செல்போன் இல்லாமல், வாகனங்களைப் பயன்படுத்தாமல், உணவுகளை சமைக்காமல் சாப்பிடுவதைக் கடைப்பிடிக்கட்டும். பெண்களின் உயிருடன் யாரும் விளையாடக் கூடாது.

? சமீபத்தில் தங்களைக் கவர்ந்த படம் எது..?

- டி.தனபாலன், சேலம்.

ஞானகுரு :

சினிமா என்பது காட்சி ஊடகம். அதாவது கண்களுக்கு விருந்தளிக்க வேண்டும். நாம் கற்பனை செய்வதைவிட, சினிமாவில் பிரமாண்டத்தைக் காட்ட வேண்டும் அல்லது நம் பக்கத்து வீட்டில் நடப்பது போன்று நிஜத்தைக் காட்ட வேண்டும். அது உணர்வாக இருந்தாலும் ஃபேன்டஸியாக இருந்தாலும் மனதை தொடும்போது வெற்றி கிடைத்து விடுகிறது. கண்டதையும் படிக்க வேண்டும் என்பது போல் கண்டதையும் ரசித்துப் பார். சினிமாக்களைவிட இப்போது ஓ.டி.டி.களில் உணர்வுகளும் உருவகங்களும் சிறப்பாக கையாளப்படுகின்றன. நம் வரலாற்றை திரும்பிப்பார்க்க வைக்கும் ஒரு வெப்சீரிஸ் என்றால் The Forgotten Army. நமது காவல் துறையின் இன்னொரு பக்கத்தை Delhi Crime நீதித்துறையின் புதிய பரிமாணத்தை Criminal Justice மருத்துவத்தின் மேன்மையை Grey's Anatomy ஆகியவற்றில் பார்க்கலாம். இந்த விஷயத்தில் தென் கொரியர்கள் மிகவும் ரசனையாக மாறியிருக்கிறார்கள். அவர்களது Extraordinary Attorney Woo வெப்சீரிஸை பார்த்தால், எப்பேர்ப்பட்ட மனிதருக்கும் பூஸ்ட் கிடைத்துவிடும்.

? பிரச்னைகள் மனிதனுக்கு வருவது சாதிக்கவா அல்லது சரிவை ஏற்படுத்தவா..?

- ஏ.முத்துலட்சுமி, லட்சுமிநகர்.

ஞானகுரு :

வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது போல் பிரச்னைகள் இல்லாமல் மனிதர்கள் இல்லை. அதனை அவன் எப்படி எடுத்துக்கொள்கிறான் என்பதில்தான் சாதனை அல்லது சரிவு கிடைக்கிறது.

www.gyaanaguru.com

? மனிதனை சாய்ப்பது மன நோயா... உடல் நோயா..?

- ஜி.நித்யா, கள்ளிக்குடி.

ஞானகுரு :

ஒவ்வொரு காலகட்டத்திலும் பிளேக், காலாரா, பெரியம்மை, கொரோனா போன்ற நோய்கள் உருவாவதும், அது மனித குலத்தின் ஒரு பகுதியை அழித்துச்செல்வதும் வழக்கமான ஒன்றுதான். இந்த நோய்களில் இருந்தும் தப்பமுடியும் என்று மனதை வலிமையாக வைத்திருப்பவன், ஒருவேளை அப்போதைக்கு மனதால் தப்பிப் பிழைக்கலாம். ஆனால், அது நிரந்தரமல்ல. இறுதியில் ஏதேனும் ஒரு நோய் உயிரைக் குடித்துவிடும்.

? என்னை யாருமே மதிப்பதில்லை, காரணமும் எனக்குத் தெரியவில்லை..?

- செ.அழகேசன், மயிலாடுதுறை.

ஞானகுரு :

பொதுவாக எப்படிப்பட்ட மனிதர்களை மதிக்காமல் தவிர்க்கிறார்கள் தெரியுமா? தேவையில்லாமல் அதிகம் பேசுபவர்களை யாரும் விரும்புவதில்லை. எனவே அமைதியாக இருங்கள். உங்களைப் பற்றிய அத்தனை தகவல்களையும் பிறரிடம் சொல்லிவிடாதீர்கள். அதாவது, திறந்த புத்தகமாக வாழ்பவர்களுக்கு மதிப்பு கிடையாது. உங்களிடம் ஏதோ ஒன்று இருப்பதாக நினைக்கும் பட்சத்திலே மதிப்பார்கள். பிறர் அவமானம், அவமரியாதை செய்வதை பொறுத்துக்கொள்பவர்களை யாரும் மதிக்க மாட்டார்கள். எல்லா விஷயத்திலும் சந்தேகம் கேட்பவரை யாருக்கும் பிடிப்பதில்லை. நீங்களே முடிவு எடுப்பவராக இருங்கள். அப்பாவியாக இருப்பவரை யாரும் மதிப்பதில்லை, தெளிவாக இருங்கள். இந்த காரணங்களில் எது உங்களிடம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து தவிர்த்துவிடுங்கள், மதிப்பு தானே வந்துவிடும்.



? இந்தியாவின் பலம், பலவீனம் என்ன..?

- கே.தனலட்சுமி கதிரேசன், பாண்டியன் நகர்.

ஞானகுரு :

இந்தியாவில்தான் ஏராளமான மதங்களை பின்பற்றும் மனிதர்கள் இருக்கிறார்கள். உண்மையில் ஆளுக்கு ஒரு மதம் இருக்கவேண்டும் என்பதுதான் சரியான சிந்தனை. அந்த வகையில் இதுதான் இந்தியாவின் பலம். அதையே மனிதர்கள் பலவீனமாகவும் மாற்றிவிடுகிறார்கள்.

? மனதின் ஏக்கங்கள்தானே கனவாக வருகிறது..?

- எஸ்.பவானி, யமுனை தெரு.

ஞானகுரு :

மீதமான உணவு, கிழிக்கப்பட்ட பேப்பர், காற்றில் கொண்டுவரப்படும் இலைகள், பூக்கள் என்று வீட்டுக் குப்பைத் தொட்டியில் பலவகையில் குப்பை சேருவதைப் போலவே, மனதுக்குள் எத்தனையோ எண்ணங்கள், ஆசைகள், கோபங்கள், காட்சிகள், சம்பவங்கள் சேர்ந்துகொண்டே போகின்றன. அந்த குப்பைகள் நிரம்பி வெளியேறும் காட்சிகள்தான் கனவு எனவே, கனவை கிளறாதீர்கள், கெட்ட வாடையே வரும்.

ஓர் ஆண்டு சந்தா 500 ரூபாய் செலுத்திவிட்டீர்களா..?

மனதுக்கு சந்தோஷம் தரும் ஞானகுரு மகிழ்ச்சி, உடலுக்கு ஆரோக்கியம் தரும் ஞானகுரு யாக்கை மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செல்போன் : 7299753999

வங்கிக் கணக்கு:
GYANAGURU PUBLICATION,
UNION BANK OF INDIA,
IFS CODE : UBIN0554847,
Current Accout No. 548401010050639

க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.

வார்த்தைகளே வரம்

பிரார்த்தனைகளை விட பொறுமை நல்ல பயன் கொடுக்கும்

கௌதம புத்தர்

வாழ்க்கை சலிப்படைய தொடங்கும்போது, மரணம் பற்றிய எண்ணங்கள் சுவாரஸ்யமாகிவிடும்.

ராஜன் யயாதி

நடந்துகொண்டே இருங்கள், தானே பாதை உருவாகிவிடும்

ஜென்

சிந்தனை சரியில்லாத பொழுது ஏற்படும் ஒருவித மனநிலைக்கு பெயர் காதல்

ஓஷோ

கனவுகள் எல்லாம் நனவாகும். அதற்குள் நிறைய காயங்கள் விழுந்துவிடும்

சார்லி சாப்ளின்.

நொடிக்கும் குறைவான நேரத்தில் சரியான முடிவெடுக்கத் தெரிந்தவனே தலைவன்

நரன்

பாலைவனத்தைக் கடப்பவர்கள் தான் கதறி அழுகிறார்கள். வசிப்பவர்கள் அல்ல.

ப.பி

நம் ஒவ்வொருவருக்கும் மற்றொருவர் தேவைப் படுகிறார்

எரிக் எரிக்சன்

சூரியனுக்குக் கீழே கர்வப்பட்டுக் கொள்ள ஒன்றுமே இல்லை.

கலீல் ஜிப்ரான்

நம் கண்ணுக்கு தெரியாமலே உலகத்தில் உள்ள அனைத்தையும், காலம் நகர்த்திக்கொண்டே இருக்கிறது.

சோ.தர்மன்

www.gyaanaguru.com



சரியான தருணத்திற்குக் காத்திருப்பதும் ஒரு தவம்

தன்னம்பிக்கை புத்தகம்

காத்திருத்தல் என்பது வெற்றிக்கான ஒரு முக்கியமான அம்சம். சரியான காலமும் நேரமும் அமையும் வரை காத்திருப்பவர்களே வெற்றி பெறுகிறார்கள். நேர்மறை சிந்தனையுடன் காத்திருக்கக் கற்றுத் தரும் ஒரு தன்னம்பிக்கை புத்தகத்தை வாசகர்களுக்கு அறிமுகம் செய்கிறார் கட்டுரையாளர்.

லின்னே காக்ஸ் (Linne Cox) - 1957 ஆம் ஆண்டில் பிறந்தவர். நீண்ட தொலைவு நீச்சலில் பல்வேறு சாதனைகளைப் புரிந்தவர். அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் முதன்முதலில் நீந்தியவர், 2003ம் ஆண்டு அண்டார்டிக்காவின் -32 குளிரில் ஏறத்தாழ 25 நிமிடங்கள் (1.6 Miles) நீந்திக் கரையை அடைந்தார். இந்த அனுபவத்தை அவரே எழுதி வெளியிட்டிருக்கிறார், அந்த நூல்தான் ஸ்விம்மிங் டு அண்டார்டிக்கா.

பொதுவாக -32 குளிர்ந்த நிலையில் பெரும்பாலான மனிதர்கள் இறந்து விடுவார்கள் என்பதுதான் மருத்துவ விதி, நரம்பு மண்டலம் கடுமையான பாதிப்படைந்து குருதி உறைவு ஏற்படும், ஆனால், இந்தப் பெண் எதற்காக இப்படி ஒரு சவாலை வாழ்க்கையில் எதிர்கொள்ளத் துணிந்தார் என்பதற்கு லின்னே காக்ஸ் விடையளிக்கிறார்.

"நான் இந்த வகையான ஆய்வுகளையும், சவால்களையும் விரும்புகிறேன். இதுவரை மனிதர்கள் செய்ததைத் தாண்டி, உடலை உந்தித் தள்ளும் எண்ணம் எப்படி என்னை இயக்குகிறது? மனிதர்களால் என்ன செய்ய முடியும்?, மானுடத்தின் மன எல்லைகளை விரிவாக்கும் ஒவ்வொரு சோதனைகளும் ஆபத்தானவைதான். ஆனால், அந்த சாதனையை முதலில் செய்பவர்கள் நாமாக இருப்பதை உணரும்போது எவ்வளவு கடினமான கடல் நீரும் தெளிவான, இலகுவான ஒன்றாக மாறி விடுகிறது, வானத்தில் பறப்பதைப் போல உணர முடிகிறது" என்கிறார்.

46 வயதில் பெரும்பாலானவர்களின் உடலும், மனமும் தேங்கிய நிலையை அடைந்து விடுகிறது, புதிய சவால்களை ஏற்றுக் கொள்வதில் இருந்தும், புதிய இயக்கங்களை நிகழ்த்தும் நிலையில் இருந்தும் அவர்கள் பின்தங்கி விடுகிறார்கள்.

ஆனால், லின்னே காக்ஸைத் போன்றவர்கள் தான் இந்த எல்லைக்கோடுகளைத் தொடர்ந்து நகர்த்தும் கலையைக் கற்பிக்கிறார்கள். அண்டார்டிகாவின் குருதியை உறைய வைக்கும் நீர்ப்பரப்பில் நீந்துவதால் அவர் தனது உடலைப் பணயம் வைக்கிறார், ஆனால், மனதைப் ஆகச்சிறந்த உயரத்துக்கு உயர்த்திக் கொள்கிறார்.

நீந்தும்போது எதிர்மறை எண்ணங்கள் அவரை மிக இறுக்கமாகப் பற்றிக் கொள்ளும் போது, நேர்மறையான இலக்கை நோக்கி அவர் நீந்துகிறார், மன எழுச்சியை உருவாக்கி எதிர்மறை சிந்தனைகளை எதிர்கொள்கிறார். இது மனப்பயிற்சியின் மூலமாக மட்டுமே சாத்தியமாகிற விஷயம் என்பதைத்தாண்டி மானுட மனதின் செயல்பாடுகளை இந்த முயற்சிக்குள் உள்ளீடு செய்து ஆய்வு செய்கிறார் என்பதுதான் பெரிய திறப்பு.

சில சமயங்களில் புதிய சாதனைகளை செய்வதற்கு நேரம் எடுக்கும், சில நேரத்தில் நீங்கள் நினைத்தது எதுவுமே குறிப்பிட்ட நேரத்தில் நடக்காது, சில சமயங்களில் நீங்கள் தோற்றுப் போக வேண்டும். நீங்கள் அவமானங்களையும், சிறுமைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும், காத்திருங்கள், பொறுமையாக இருங்கள், காத்திருத்தல் என்பது மிக முக்கியமான விஷயம்.

காத்திருத்தலின் போதுதான் உங்கள் மனம் புதிய சாதனைகளுக்கான ஒத்திகை செய்கிறது, தயாராகிறது, பிறகு ஒரு கணத்தில் நீங்கள் வானத்தில் பறப்பதை போல உணர்வீர்கள். லின்னே காக்ஸ் ஏறத்தாழ அவரது உயிரைப் பணயம் வைத்து அண்டார்ட்டிக்காவின் கரையை அடையும் போது உணர்ந்ததைப் போலவே...

- கை.அறிவழகன்

www.gyaanaguru.com

புதிய பார்வை, புதிய கண்ணோட்டத்தில்
இதிகாச நாவல்
ஞானகுரு பதிப்பகம் வெளியீடு
வண்ணப் புத்தகம் 600 ரூபாய்
கருப்பு வெள்ளை 300 ரூபாய்
இ-புக் 150 ரூபாய்
உங்கள் பிரதிக்கு 80725 89355 அழைக்கவும்
80725 89355 செல்போன் எண்ணுக்கு பணம், முகவரி அனுப்புங்கள். எங்கள் செலவில் புத்தகம் அனுப்பிவைக்கப்படும் க்யூ ஆர் கோடு மூலமாகவும், வங்கிக் கணக்கிலும் பணம் அனுப்பலாம்.
GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA,
IFS CODE : UBIN0554847,
Current Account No. 548401010050639
எஸ்.கே.முருகன்
நெருப்பு
சிகண்டியாக மாறிய அம்பையின் சரிதம்